# இஸ்லாமாபாத்தில் 2016 நவம்பரில் நடாத்தப்படுவதற்கு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள 19வது சார்க் உச்சி மாநாட்டில் இலங்கையின் பங்குபற்றுகை

இஸ்லாமாபாத்தில் 2016 நவம்பர் மாதம் 09 ஆம் 10 ஆம் திகதிகளில் சார்க்கின் 19வது உச்சி மாநாடு நடாத்தப்படுவதற்கு இப்பிராந்தியத்தில் நிலவுகின்ற சுற்றாடல் நிலைமையானது உகந்ததாக இல்லை என இலங்கை கவலையுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றது.

சார்க் பட்டயத்தின் பொது ஏற்பாடுகள், கருத்து வேறுபாடின்மை அடிப்படை மீது சகல மட்டங்களிலும் எடுக்கப்படல் வேண்டுமெனத் தேவைப்படுத்துகின்றதுடன் இது சார்க் நாடுகளின் தலைவர்களின் அல்லது சார்க் நாடுகளின் அரசாங்கங்களின் தலைவர்களின் கூட்டங்கள் நடாத்தப்படுவதற்கும் ஏற்புடைத்தானவைகளாகும்.

தெற்காசியாவின் மக்களுடைய நன்மைக்கான அர்த்தமுள்ள பிராந்திய ஒத்துழைப்பின் வெற்றிக்கு சமாதானமும் பாதுகாப்பும் அத்தியாவசியமான விடயங்களாகும். பிராந்திய ஒத்துழைப்பிற்கான பொறுப்பேற்பை ஏற்றுக் கொண்டுள்ள சார்க்கின் ஸ்தாபக உறுப்பினரொருவராகவுள்ள இலங்கையானது பிராந்திய ஒத்துழைப்பைத் தொடர்ந்தும் மேற்கொள்ளுவதற்கு உகந்த சுற்றாடலொன்றை உருவாக்குவதற்காக எமது பிராந்தியத்தின் சமாதானத்தையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்குத் தேவைப்படும் சுற்றாடலொன்றை உருவாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமென இலங்கை நம்புகின்றது.

இலங்கையானது சகல வடிவங்களிலும் தோற்றப்பாடுகளிலும் நிலவுகின்ற பயங்கரவாதத்திற்கு கண்டனம் தெரிவிக்கின்றதுடன் இத்தொடர்பில் இப்பிராந்தியத்தில் தீர்க்கமான விதமொன்றில் பயங்கரவாதம் கையாளப்பட வேண்டியதன் தேவையைப் பற்றி வலியுறுத்திக் கூறுகின்றது.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு
கொழும்பு

2016 செப்டம்பர் 30 ஆந் திகதி